# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் | வணிக மாத இதழ்

Volume: 13 | Issue : 07 | OCTOBER 2024 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE



VH VEDHAVALLI HOLIDAYS



மாதந்தோறும் விமானத்தில்

காசி

யாத்திரை

5 நாட்கள்

VH VEDHAVALLI HOLIDAYS



5 நாட்கள்

காஷ்மீர்

Date : 02-11-2024

91599 18447

வேதவல்லி ஹாலிடேஸ்



82, காமராஜர் சாலை, அலங்கார் தியேட்டர் எதிர்புறம், மதுரை -09








SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை–1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536



அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

METRO



# மெட்ரோ ஷூ மார்ட்



16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

**PH : 23322364, 2331297, 4382343**



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

## Sri Balameenakshi Aqua Pumps

AQUATEX®


Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317

B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349








Prop.: B.S. Rajan

- CCTV Camera
- Long Distance Monitor
- Security Alarm
- Digital Video Recorder
- Voice Records
- Access Control System
- Firm Alarm
- Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

## A TO Z
### CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633



**உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?**

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அணுகவும்

**L.N.R. தாமோதரன் - 98431 71477**

# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ஞ்கோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

நம் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், இதுவரை எட்டு தன்னிகறற்ற தலைவர்களால் எட்டுத்திக்கும் புகழ் பரப்பியது. அதனால் தானோ எனது இந்த புதிய தலைமைப் பணி என்னை திக்குமுக்காட வைக்கிறது.!!!

எனினும், முன்னாள் தலைவர்களின் வழிகாட்டுதல், சக நிர்வாகிகளின் அர்ப்பணிப்பு, செயற்குழு உறுப்பினர்களின் ஒத்துழைப்பு, சிறப்பு அழைப்பாளர்களின் செயல்திறன் மற்றும் ஆலோசகர்களின் யோசனைகள், இவை எல்லாவற்றுக்கும் மேலாக, போசக, ஆயுட்கால, வருடாந்திர உறுப்பினர்களாகிய உங்களின் ஆதரவுடன் நமது சேம்பர்-ஐ அடுத்த உயர்ந்த இலக்கிற்கு கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கை தொடர்கிறது. மேலும், வலுவடைகிறது.

நமது பயணம், முன்னுதாரணத் தலைவர்களால் நான்குவழி சாலையில் சென்று கொண்டிருக்கிறது. இனி, ஆறுவழி, எட்டுவழி என்ற குறிக்கோளுடன் பயணிப்போம்.

ஏராளமான எண்ணிக்கையில் இளைஞர்கள் தொழில் முனைவோர்களாக திகழ, மகளிர் தொழில் துவங்க ஊக்குவிக்க, என்.ஆர்.ஐ களுடன் இணைந்து ஏற்றுமதியைப் பெருக்குதல் என்ற சீரிய கொள்கைகளுடன் நிகழ்ச்சிகள், செயல்பாடுகள் இருக்கும் என்று உறுதி அளிக்கிறோம்.

இந்த புதிய அணி, சேம்பர்-ன் விலை மதிப்பில்லாத அணிகலன்களாக ஜொலிக்க, பாடுபடுவோம்.

இந்த வருடத்திய கே.எல்.என் பொறியியற் கல்லூரியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் சிட்கான் 2024 வெற்றிகளைத் தொடர்ந்து புதிய நிர்வாகக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டிருப்பது. சேம்பர் சாதனைகளில் ஒப்பு உயர்வற்ற ஒன்று.

இதனை செயல்படுத்திக்காண்பித்த அப்போதைய உடனடி முன்னாள் தலைவர் திரு. குமரன் பி. ஜகுவா அவர்களுக்கும் தற்போதைய உடனடி முன்னாள் தலைவர் திரு. டி.ஆர். மோகன்ராம் அவர்களுக்கும் நன்றிகள் பல.

ஸௌராஷ்டர சேம்பர் ஆப் காமர்ஸ் உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த தீபாவளி திருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். அனைவரும் உடல் நலமும், பொருள் வளமும், இறைவன் அருளும் பெற்று இன்புற்று வாழ இந்த இனிய நாளில் இறைவனை பிரார்த்திக்கிறோம்.

மீண்டும் அடுத்த மாத இதழில் சில சாதனைகளுடன் சந்திப்போம்.

K.K. தினேஷ், தலைவர்

SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |


| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

2024-2026 அடுத்து இரண்டாண்டுகளுக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் பொதுச் செயலாளராக என்னை ஏக மனதுடன் தேர்வு செய்த அங்கத்தினர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு எனது பணியைத் துவங்குகிறேன்.

**29.09.2024** - ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 17வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் மதுரை கீதா நடனகோபால நாயகி மந்திர் அரங்கில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் 2024-2026ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது.

**30.09.2024** - முதல் நிர்வாகிகள் குழு கூட்டம் சேம்பர் அலுவலகத்தில் மாலை 6 மணி அளவில் நடைபெற்றது.

**01.10.2024** - 2024-2026ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகப் பதவி ஏற்பு விழா சேம்பர் அரங்கில் நடத்தப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக மதுரை மடீட்சியா அமைப்பின் தலைவர் Rtn. PHF, A. **கோடீஸ்வரன்** அவர்களும், கௌரவ விருந்தினராக Dr. **அஜீத் பாபு** Co-Founder & CEO., Gudlyf Mobility Pvt. Ltd. (Former DGM @ Automative Research Association of India) Ph.D., in Material Science அவர்களும் கலந்து கொண்டு பேசினார்கள்.

**04.10.2024** - அடுத்த இரண்டாண்டுகளுக்கு சேம்பர்-ன் சிறப்பு அழைப்பாளராக இணைந்து பணியாற்ற விரும்புவோர்களை அழைத்து சேம்பர் செயல்பாடுகள் குறித்து விளக்கப்பட்டது. மகளிரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பணியாற்ற ஆர்வம் தெரிவித்தனர்.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் செயற்குழு உறுப்பினராக ஒருமனதாக மீண்டும் என்னை தேர்வு செய்த அங்கத்தினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, சேம்பருக்கும், அங்கத்தினர்களுக்கும் இடைய மிகப்பெரிய பாலமாக இருக்கும் லாப் ஸமாச்சார் இதழின் சேர்மன்-ஆக செயல்பட பொறுப்பளித்த நிர்வாகிகளுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இந்த லாப் ஸமாச்சார் இதழில் தொழில் முனைவோர்களுக்கு பயன்தரக்கூடிய பல்வேறு தகவல்கள் அடங்கிய இதழாக தொடர்ந்து வெளிக்கொணரப்படும் என்று உறுதிபட தெரிவித்துக்கொள்கிறேன்.

இதழ் வாசகர்கள் தங்கள் கருத்துக்களையும் அளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

அதோடு, இதழ் விளம்பரதாரர்கள் தங்கள் பங்களிப்பையும், ஆதரவையும் தொடர்ந்து அளித்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544







Happy Diwali
Bala V Kutti
Founder & Chairman
BVK Group
Best Compliments from
BVK GROUP
BVK GROUP
Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation
4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road,
Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.



# 17ம் ஆண்டு பொதுக் குழு கூட்டம்

## 2024-2026ம் ஆண்டிற்கான புதிய நிர்வகத் தேர்வு

சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 17ம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் சென்ற மாதம் 30.10.2024 அன்று காலை சரியாக 10 மணிக்கு மதுரை தெப்பக்குளத்தில் அமைந்துள்ள கீதா நடனகோபால நாயகி மந்திர் அரங்கில் சேம்பர் தலைவர் திரு. டி.ஆர். மோகன்ராம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், சேம்பர் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், போஷக உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் சேம்பர் ஆயுட்கால மற்றும் ஆண்டு சந்தா உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய நிர்வாகம் மாறுவது வழக்கம். அதன்படி, 2022-2024ம் ஆண்டு நிர்வாகம் செப்டம்பர் மாதத்துடன் நிறைவுபெற்ற நிலையில், 2024-2026ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தேர்வு இந்த பொதுக்குழு கூட்டத்தில் அனைவரின் முழு சம்மதத்துடன் செயற்குழு மற்றும் நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றன.

முன்னதாக, சேம்பர் தலைவர் திரு. டி.ஆர் மோகன்ராம் அவர்களின் வரவேற்புரையுடன் கூட்டம் துவங்கியது. தொடர்ந்து, பொதுச் செயலாளர் திரு. கே.கே. குபேந்திரன் அவர்களின் ஆண்டறிக்கை மற்றும் சேம்பர் பொருளாளர் திரு. ஏ.பி. குமரேஷ் பாபு அவர்களின் 2023-2024ம் ஆண்டிற்கான வரவு செலவு கணக்கு சமர்ப்பித்தல், பட்டயக்கணக்கர் மற்றும் அவரது கட்டண நிர்ணயம் செய்தல், 2023-24ம் ஆண்டில் இணைந்த புதிய உறுப்பினர்களை அங்கீகரித்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி நிகழ்வுகளையடுத்து, 24 புதிய செயற்குழு உறுப்பினர்கள் பெயர் விபரங்களை சேம்பர் உடனடி முன்னாள் தலைவர் திரு. குமரன் பி. ஜகுவா அவர்கள் அறிவித்தார். அவர்களை அங்கத்தினர்கள் அனைவரும் ஏகமனதுடன் ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து 6 நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. இது புதிய செயற்குழு உறுப்பினர்களின் முழு ஒப்புதலுடன் நிர்வாகத்தேர்வு செய்யப்பட்டது.

அதன்படி 2024-2026ம் ஆண்டிற்கான தலைவராக திரு. கே.கே. தினேஷ், முன்னாள் தலைவராக திரு. டி.ஆர். மோகன்ராம், துணைத் தலைவராக திரு. கே.கே. குபேந்திரன், பொதுச் செயலாளராக திரு. ஏ.பி. குமரேஷ் பாபு, பொருளாளராக திரு. வி.வி. ராம்லக்ஷ்மண்ஜி, இணைச் செயலாளர்களாக திரு. எஸ்.ஜி. ஸ்ரீநிவாசன் மற்றும் திரு. டி.என். சூரியபிரகாஷ் ஆகியோர் நிர்வாகிகளாகவும்,

திரு. வி.ஜி. ராம்தாஸ் அவர்கள் வெளியுறவு செயலர் என்கிற சிறப்பு அந்தஸ்துடன் கூடிய செயற்குழு உறுப்பினராகவும்,

திரு. ஜே.எஸ். சாயிஜீவன், மரு. ஏ.ஆர். கணேசன், திரு. பி.எஸ். ஜனார்த்தனன், திரு. டி.கே. சிவநாத் பாபு, திரு. எஸ்.எம். கார்த்தி குமரன், திரு. எஸ்.கே.பி. சந்திர பிரகாஷ், திரு. டி.எம். ருபேஷ் பாபு, திரு. இ.ஆர்.கே. விக்னேஷ் பாபு, திரு. எஸ்.எஸ். ராம்சுந்தர், திரு. கே.கே. தினகரன், திரு. கே.வி. குமரேசன், திரு. எஸ்.எஸ். பிரேம் குமார், திரு. எஸ்.ஆர். சுந்தர்நாத், திரு. கே.பி. சிவப்பிரகாஷ் பாபு, திரு. எம்.எம். தனசேகரன் மற்றும் திரு. டி.கே. யாகேஸ்வரன் ஆகிய 18 பேர் செயற்குழு உறுப்பினர்களாக ஏகமனதுடன் தேர்வு செய்யப்பட்டனர்.

2024-2026 புதிய தலைவர் தேர்வு செய்யப்பட்டப் பிறகு, புதிய தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் ஏற்புரையை வழங்கினார். நிறைவாக, புதிய பொதுச் செயலாளர் திரு. ஏ.பி. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.




ADISHTU
TRUSTABLE SNACKS PARTNER
STARTUP INDIA
ENERGY BAR
ADISHTU'S FIG & APRICOT ENERGY BAR
ADISHTU'S STRAWBERRY ENERGY BAR
ADISHTU'S CRANBERRY ENERGY BAR
ADISHTU'S PEANUT ENERGY BAR
ADISHTU'S COFFEE ENERGY BAR
ALL INGREDIENTS LISTED HERE
fssai
12423012002062
Ministry of Micro, Small and Medium Enterprises
Government of India
MSME
MICRO, SMALL & MEDIUM ENTERPRISES
• NO ADDED SUGAR
• NO ADDED PRESERVATIVES
• NO ADDED CHEMICALS
• NO ARTIFICIAL SWEETNESS
• NO ARTIFICIAL FLAVORS
• NO DAIRY, SOY, GLUTEN
MADE IN INDIA
adishtu
WWW.ADISHTU.COM

# INSTALLATION CEREMONY

## New Team for the year 2024-2026

















ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 2024-2026ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகம் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி 01.10.2024 அன்று மாலை சேம்பர் மேஃபிளவர் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த பதவியேற்பு விழா துவக்கத்தில் சேம்பர் தலைவர் (2022-24) திரு. டி.ஆர். மோகன்ராம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 2024-2026ம் ஆண்டிற்கான புதிய தலைவராக திரு. கே.கே. தினேஷ் அவர்களை உடனடி முன்னள் தலைவர் திரு. குமரன் பி.ஜகுவா அவர்கள் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து திரு. டி.ஆர். மோகன்ராம் அவர்கள் உடனடி முன்னாள் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார். புதிய நிர்வாகிகளுக்கு விழாவில் கலந்து கொண்ட சமூக அமைப்புகளின் நிர்வாகிகள், முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள், தொழில் முனைவோர்கள் பலர் வாழ்த்து தெரிவித்தனர். அவர்களுக்கு பொன்னாடை அணிவித்தும், நினைவுப் பரிசுகளை வழங்கியும் கௌரம் செய்தனர்.

# SCC TEAM FOR THE YEAR 2024-2026

## OFFICE BEARERS



**K.K. Dinesh**
President
M/s. Daithyasudhan Textiles



**K.V. Bala**
Sr. President
M/s. B.V.K. Groups



**T.R. Mohanram**
Imm. Pt. President
M/s. Vignesh Graphics



**K.K. Kubendran**
Vice President
M/s. Geo Digital Press



**A.B. Kumaresh Babu**
General Secretary
M/s. Orient Builders & Decors



**V.V. Ramlakshmanji**
Treasurer
M/s. Parvadha Traders



**S.G. Srinivasan**
Joint Secretary
M/s. Srinivasa Agency



**T.N. Suriyaprakash**
Joint Secretary
M/s. Venkat Screen

## EC MEMBERS



**V.G. Ramdoss**
EC Member
M/s. Maniram Sarees



**J.S. Sayee Jeevan**
EC Member
M/s. Saibaba Agencies



**Dr. A.R. Ganesan**
EC Member
Siddha Practitioner




**B.S. Janaarthanan**
EC Member
M/s. Tick Soft



**T.K. Sivanath Babu**
EC Member
M/s. Ravi Sarees



**S.M. Karthi Kumaran**
EC Member
M/s. Tirumalay Packs




**S.K.B. Chandraprakash**
EC Member
M/s. S.K.B. Trading Company




**N.S. Prem Kumar**
EC Member
M/s. Delight Print packs P.Ltd.




**K.K. Dinakaran**
EC Member
M/s. Pandian Surfactants P. Ltd.



**K.V. Kumaresan**
EC Member
M/s. Sophy Screen



**S.S. Ramsundar**
EC Member
M/s. Tharam Associates



**E.R.K. Vignesh Babu**
EC Member
M/s. EAV Groups



**T.M. Rubesh Babu**
EC Member
M/s. TKD Enterprise Pvt. Ltd.



**S.S. PremKumar**
EC Member
M/s. Claymore IT Services Pvt. Ltd.



**S.R. Sundarnath**
EC Member
M/s. Amar Tek



**M.M. Dhanasekaran**
EC Member
M/s. Visadh Consultancy



**K.B. Sivaprakash Babu**
EC Member
M/s. K.R.B. Agencies



**T.K. Yakeshwaran**
EC Member
M/s. Vel Accounts







01.10.2024 அன்று சேம்பர் வளாகத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் சிறப்பு விருந்தினராக மடீட்சியா தொழில் வர்த்தக அமைப்பின் தலைவர் Rtn. PHF, A. **கோடீஸ்வரன்** அவர்கள் கலந்து கொண்டு பேசினார். (இடது படம்).
கௌரவ விருந்திரனாக Dr. **அஜீத் பாபு** Co-Founder & CEO., Gudlyf Mobility Pvt. Ltd. (Former DGM @ Automative Research Association of India) Ph.D., in Material Science அவர்கள் (வலது படம்) கலந்து கொண்டு பேசினார்.
விருந்தினர்கள் இருவருக்கும் சேம்பர் சார்பாக பொன்னாடை அணிவித்தும், நினைவுப் பரிசை வழங்கியும் கௌரவித்தது.






மதுரை தமுக்கம் மைதானத்தில், தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் தமிழ்நாடு ஸ்டார்ட்அப் திருவிழா 28 & 29.09.2024 ஆகிய இரண்டு நாட்களுக்கு நடைபெற்றது.

தமிழ்நாட்டில் இயங்கி வரும் சிறந்த ஸ்டார்ட்அப் நிறுவனங்களை அடையாளம் கண்டு கௌரவிக்கும் இந்த நிகழ்ச்சிகக்கு தமிழ்நாட்டில் இருந்து ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பத்திருந்தனர்.

இதில் முப்பத்தியேழு ஸ்டார்ட்அப்கள் தேர்வானது. அதில் ஒன்பது பெண் தொழில்முனைவோர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவராக நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் ஆயுட்கால உறுப்பினர் கோராக்கர் பூஜாஸ் (சன் ஈர சந்தன தயாரிப்பு) நிறுவனத்தார் **திருமதி. கே.பி. ரேகா சுரேந்திரகமார்** அவர்களுக்கு மத்திய குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக் அவர்கள் கரங்களால் விருது வழங்கப்பட்டது (இடது படம்).

உடன், சிஐஐ தென்மண்டலத் தலைவர் திரு. அஸ்வின், ஸ்டார்ட்அப்-டீஎன் அமைப்பின் சிஇஓ திரு. சிவராஜா, மதுரை மாவட்ட ஆட்சியர் திருமதி. சங்கீதா ஐஏஎஸ்., ஆகியோர் இருந்தனர்.

அவரை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் கடந்த 01.10.2024 அன்று நடைபெற்ற பதவியேற்பு விழாவின்போது அழைத்து கௌரவித்தது. மடீட்சியா அமைப்பின் தலைவர் திரு. கோடீஸ்வரன் அவர்கள் நினைவுப் பரிசை வழங்கினார்.

உடன் சேம்பர் நிர்வாகிகள், கௌரவ விருந்தினர் திரு. அஜீத் பாபு, திரு. விஜயராகவன் மற்றும் ஸௌராஷ்ட்ர முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. வி.ஜி. ராம்தாஸ் ஆகியோர் இருந்தனர்.

நமது பாரதம் எதிர்நோக்கும் இதுபோன்ற ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் இனி வரும் காலங்களில் நம் சமூகத்தில் அதிகப்படியாக உருவாகவேண்டும் என்பது நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் நோக்கம்.

**Sowndarya Traders**
*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*
T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS
57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# வாடகை ஒப்பந்தங்களுக்கு இனி 200 ரூபாய் முத்திரைத் தாள்

வீடு, கடை வாடகை உள்ளிட்ட சாதாரண ஒப்பந்த ஆவணங்களுக்கு, 200 ரூபாய் மதிப்புள்ள முத்திரை தாள்களை பயன்படுத்த, பதிவுத்துறை அறிவுறுத்தியுள்ளது.

சொத்துக்களை வாங்கும்போது அதன் மதிப்பில், 7 சதவீதம் முத்திரைத் தீர்வை, 2 சதவீதம் பதிவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த மதிப்பு அடிப்படையில், முத்திரை தாள்களை பயன்படுத்த வேண்டும் அல்லது **இ-ஸ்டாம்பிங்** முறையில் உரிய தொகையை செலுத்த வேண்டும்.

வீடு வாடகை, நிலம் குத்தகை ஒப்பந்தங்களை பதிவு செய்வதில்லை. உதாரணமாக, வீட்டை வாடகைக்கு விடுவோர், 11 மாதம் என்ற காலவரையறையில் ஒப்பந்தம் மேற்கொள்கின்றனர். ஆண்டுதோறும் இந்த ஒப்பந்தங்களை புதுப்பித்துக் கொள்கின்றனர். இதை பலரும், 20 ரூபாய் முத்திரைத் தாளை பயன்படுத்தியே எழுதுகின்றனர். இந்நிலையில், வாடகை ஒப்பந்தம் உள்ளிட்ட பணிகளுக்கு, 20 ரூபாய், 50 ரூபாய் போன்ற குறைந்த மதிப்பிலான பத்திரங்களை பயன்படுத்துவதை நிறுத்த, அரசு முடிவு செய்துள்ளது.

இது குறித்து, பதிவுத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது. சாதாரண ஒப்பந்தங்களுக்காக பயன்படுத்தப்படும், 20 ரூபாய், 50 ரூபாய் முத்திரைத் தாள்கள் கிடைப்பதில்லை என புகார் கூறப்படுகிறது. அதனால், குத்தகை ஒப்பந்தம், பிரமாண பத்திரம் போன்ற ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை, 20 ரூபாயில் இருந்து, 200 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே பொதுமக்கள் இந்த ஒப்பந்தங்களுக்கான முத்திரைத் தாள்களை பயன்படுத்த வேண்டும். பதிவு செய்யாமல் வைத்துக் கொள்வதாக இருந்தாலும், இந்த மதிப்பு முத்திரைத் தாள்களையே பயன்படுத்த வேண்டும். 200 ரூபாய் முத்திரைத் தாள் பயன்பாடு குறித்து, பொது மக்களுக்கு சார்-பதிவாளர் வாயிலாக அறிவுறுத்தல்கள் வழங்கி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

31.05.2024 வரை தமிழ்நாட்டில் உள்ள உத்யம் பதிவு பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| பிரிவு | எண்ணிக்கை | சதவிகிதம் |
|---|---|---|
| குறு நிறுவனங்கள் | 24,52,052 | 97.80% |
| சிறு நிறுவனங்கள் | 51,022 | 2.03% |
| நடுத்தர நிறுவனங்கள் | 4,388 | 0.17% |
| **மொத்தம்** | **25,07,462** | **100.00%** |

# வணிக கட்டடங்களுக்கும் ஜி.எஸ்.டி. உள்ளீட்டு வரி வரவு

### – உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

வணிகக் கட்டங்களுக்கும் உள்ளீட்டு வரி வரவு எடுத்துக்கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பொருள் தயாரிக்க அல்லது சேவை அளிக்க கொள்முதல் செய்யப்படும் பொருட்கள், பெறுகின்ற சேவைகளுக்கு ஜி.எஸ்.டி வரிச் சட்டத்தின் கீழ் வரிக்கு உட்பட்ட பொருட்களுக்கு செலுத்திய வரியை உள்ளீட்டு வரி வரவாக (இன்புட் கிரெடிட் டாக்ஸ்- ஐ.டி.சி.) எடுத்துக்கொள்ளலாம். அந்த வரித் தொகையை தாங்கள் விற்கும் சேவைக்கு வசூலாகும் ஜி.எஸ்.டி., வரியில் கழித்துக்கொண்டு மீதி வரித்தொகையை நிறுவனங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டும். இதுதான் ஜி.எஸ்.டி வரி முறையின் அடிப்படை சித்தாந்தம். இதன் மூலம் பொருட்கள், சேவைகளின் விலையேற்றம் கட்டுப்படுத்தப்படும்.

ஆனால், கட்டுமானத்துறையில், இதற்கு மாறான நடைமுறை இருந்ததால் வணிகர்கள் பாதிக்கப்பட்டனர். தற்போது உச்சநீதிமன்றம் மூலம் அந்த பாதிப்பு நீக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, ஜி.எஸ்.டி., வரிக்கு உட்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களை நிறுவுவது, அலுவலகம் இயங்குவது, வாடகைக்கு விடுதல், சேவைகளை அளிக்கும் வணிக கட்டடங்களுக்கு இந்த உள்ளீட்டு வரிமுறை பொருந்தாது என ஜி.எஸ்.டி வரிச்சட்ட அமலாக்கத்துறை அறிவித்தது.

வணிகக் கட்டடங்களின் பயன்பாடு மூலம் அரசுக்கு ஜி.எஸ்.டி வரி வருவாய் கிடைப்பதால் அவற்றையும் ஜி.டி.சி., க்கு உட்பட்ட தளவாட பொருட்கள், இயந்திரங்களை தளவாட பொருட்களாக கருதி ஜி.டி.சி வரி வரவு எடுக்க அனுமதிக்க வேண்டும் என்று பல்வேறு வணிக சங்கங்கள் கோரிக்கை வைத்ததன. நமது சேம்பரும் கோரிக்கை வைத்திருந்தது.

இக்கோரிக்கையை ஏற்கும் வகையில் தற்போது வணிக கட்டடங்களுக்கு செலுத்திய ஜி.எஸ்.டி வரியை உள்ளீட்டு வரியாக எடுத்துக்கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இத்தீர்ப்பின் மூலம் தொழில் வணிகம் செயல்படுதற்கான கட்டடங்கள், வாடகைக்கு விடப்படும் கட்டடங்கள், மால்கள் கட்டுவதற்கான உள்ளீட்டு வரி வரவு எடுத்துக்கொள்ள முடியும். இதனால் கட்டுமானச் செலவு குறைவதோடு கட்டுமானத்துறை வளர்ச்சி பெறும்; கட்டட வாடகை குறையும்.

மாவட்டம் வாரியாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பகிர்வு கீழ்கண்டவாறு:

பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் – முதல் 5 மாவட்டங்கள்

| ▪ பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (இலட்சத்தில்) | சென்னை | கோவை | சேலம் | திருப்பூர் | மதுரை |
|---|---|---|---|---|---|
| | 2.91 | 2.03 | 1.33 | 1.30 | 1.10 |

# மருத்துவ தகவல்

கேள்வி: என் வயது 38. ஒரு சாலை விபத்தில் 3 மாதங்களுக்கு முன் என் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. அன்று முதல் என்னால் தோள்பட்டையை தூக்க முடிவதில்லை. X-Ray எடுத்ததில் தோள் மூட்டினில் Humerus என்னும் எழும்பில் Greater Tuberosity என்னும் பகுதி உடைந்து இருப்பதாக கூறப்பட்டுள்ளது. என் தொழில் லாரி ஓட்டுவது ஆகும். முதலில் நாடி வைத்தியம் மேற்கொண்டதால் நான் எலும்பு மூட்டு மருத்துவரை மூன்று மாதங்கள் கழித்து தான் பார்த்தேன். இப்பொழுது என் பிரச்சனை சரியாகுமா? என்னால் லாரி ஒட்டும் தொழிலுக்கு செல்ல முடியுமா?

பதில்: Greater Tuberosity என்னும்பகுதியில் தோள்பட்டையை உயர்த்துவதற்கு தேவையான தசை இணைகிறது. ஆதலால் உங்களுக்கு தோள் மூட்டு உயர்த்த முடியவில்லை. மூன்று மாதங்கள் எனப்து சற்று அதிகமான தாமதம் என்றாலும் உடைந்த எலும்பு அல்லது தசை நாரை மீண்டும் சேர்த்து வைப்பதே நல்லது. தற்போது உள்ள நவீன தொழில்நுட்பத்தில் ஆர்தோஸ்கோபி கருவிகள் உதவியோடு சிறியதாக திறந்து இதை சீரமைக்க முடியும். மேலும், உங்கள் தோள்பட்டை உயர்த்துவதற்கு 50% மேல் வாய்ப்பு உள்ளது. இதுவே தாமதமின்றி வந்திருந்தால் 90% மேல் நிவாரணம் கிடைக்கும் வாய்ப்பு இருந்திருக்கும்.

– மரு. கே.என். சுப்பிரமணியன்,
வேல் மருத்துவமனை & வேல் சிறப்பு எழும்பியல் மையம்

# திருக்குறள்

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்**
**கடையரே கல்லா தவர்**

**பொருள்:** (படிப்பில்லாதவர்கள் எவ்வளவு செல்வச் சிறப்புள்ளவர் – களானாலும் பல காரியங்களுக்கும் படித்தவர்களுடைய தயையை நாட வேண்டியவர்களே). எந்தவிதமான குறைச்சலும் இல்லாவிட்டாலும் பணக்காரர்களுடைய வாசலில் ஏழைகள் குறையிரந்து நிற்பதைப்போல் கற்றவர்கள் வாசலில் நிற்க வேண்டியவர்களே கல்லாதவர்கள்.

அதிகாரம் 40 | கல்வி (படித்து அறிவு பெறுவது) | அரசியல்


அப்போலோ மோட்டார் & பம்ப்ஸ்
APPOLO SALES & SERVICE
Mfrs : SRI KARTHICK PUMPS, MADURAI - 625 009. GSTIN : 33CALPK9113M1ZE
YOUR TRUSTED BRAND IN JET PUMPS SOURASHTRIAN PRODUCT
32B, குருவிக்காரன் சாலை,
கணேஷ் தியேட்டர் பாலம் அருகில், மதுரை - 625 009.
98428 14725
பழைய மோட்டார் EXCHANGE செய்யப்படும்
கம்பரசர் மோட்டார் ரூ12,500 முதல்
மோனோபிளாக் மோட்டார் ரூ 6500 முதல்
ஓபன்வெல் மோட்டார் ரூ 5500 முதல்
சப்மெர்சிபள் பம்ப் (காப்பர் ரோட்டர்) ரூ 7500 முதல்











## Available for Lease Rent

**Owner Name:**
M.K. Kaladhar Babu
Managing Director
Pandian Printpacks and Textile Mills Pvt. Ltd.,
Kappalur, Madurai - 625008

**GST No.:** 33AABCP0789M1Z4

**SIDCO Address:**
Shed No. 22A, SIDCO Industrial Estate, Kappalur, Thirumangalam Taluk, Palakkapudupatti Village, Madurai - 625008.

**Building Area:**
61.5' * 42.5' (2615 Sq.ft) with Galvanised (JSW) sheet roofed buildings

**Shed No.:** 5

**EB Power:** 104.8HP/105KW

Available for immidiate occupation.

**Contact Nos.**
99944 35350
99944 98090



நூருண்டு கால பட்டு பாரம்பரியம்
SRB SILKS HOUSE
145,East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

SRB FINSERVE PVT.LTD.
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

SRB RETAIL LLC.
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO,43035.
Ph : +1 952 290 6405

SRB MULTI PURPOSE HALL
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
Cell : 89039 29247

100 YEARS SRB

EXPRESS BRIYANI
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

KEESHTU BOLI & SNACKS
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

SRB CATERING
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

SWASI NATURO CURE HOSPITAL
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL



ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Cell: 90805 54802, 99424 90217
Prof. Dr. M.V. SUBBURAMAN
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com



MAHO JASE
SHIKO HODO
IT Service
Comprehensive IT Partner
O.R. SURESH BABU
Co-Founder & Marketing Head
WEBSITE & SOFTWARE DEVELOPMENT
Websites | Mobile APP | E-Commerce
Starts From ₹5000/-
O.S. HIRAN RAM BABU
Co-Founder & CEO
DIGITAL MARKETING
Call Us
• Digital Marketing
• Social Media Management
• Poster Design
• Ads on Social Media
• WhatsApp Catalogue setup
OTHER SERVICES: IT Training, Guaranteed Career Support, College Projects, Student Internship, Presentation (PPT), MSME & UDAYAM Registration, Infrastructure Management Services
MAHO JASE IT
471, West 1st Cross St., KK Nagar, Madurai- 20.
+91-6379618513 | 0452-4991171
CHENNAI | MADURAI | TRICHY
info@mjit.in
www.mjit.in

# பண்டமாற்று காலந்தொட்டே பண்டிகைகளின் பரிணாம வளர்ச்சி

மனிதகுலத்தின் நாகரீகம் தோன்றி வளர்ந்ததற்கு முழுமுதற் காரணம் பண்டிகைகள் என்றால் அது மிகையாகாது.

பண்டமாற்று காலத்திலிருந்தே, இருப்பவன், இல்லாதவன் (கல்வி, செல்வம், வீரம் போன்றவற்றிற்கு பொருந்தும்) என்ற பாகுபாடு பண்டிகைகளுக்கு இருந்ததில்லை. ஈகைக்கும் தியாகத்திற்கும் விழா எடுக்கும் திருவிழாக்கள்தான் பண்டிகைகள். சமூகங்களை இணைப்பதும் வேற்றுமையில் ஒற்றுமைகாணும் நம் நாட்டின் அடித்தளம், பண்டிகைகள் என்பதற்கும் சான்றுகள் தேவையில்லை.

நூற்றாண்டுகள் என்ன?. பல ஆயிரம் ஆண்டுகளின் சகாப்தம் என்று நிலைத்து நிற்பவை பண்டிகைகள் தான்.

ஆதிகாலந்தொட்டே அனைவரையும் ஒருங்கே இணைத்து, மகிழ்ச்சியை பெருக்குவதற்கு பண்டிகைகளே முன்னோடி.

பாசம், குடும்ப நேசம், உளவியல், பொருளாதாரம் போன்றவற்றிற்கு ஆதாரம் பண்டிகைகள் என்பதற்கு இருவேறு கருத்துகள் இருக்க முடியாது.

நித்ய தினமும் பூமியை வாழவைக்கும் சூரியனுக்கு நாம் செலுத்தும் நன்றிதான் பொங்கல் பண்டிகை. குலம் காக்கும் பிராணிகளையும் போற்றி வணங்கும் பண்டிகை, மாட்டுப்பொங்கல்.

தேசியத்தையும், தெய்வீகத்தையும் இணைப்பது விநாயகர் சதுர்த்தி. சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை என்பன கல்விக்கும், செய்யும் தொழிலுக்கும், நமக்கும் இருக்கும் ஆத்மபந்தத்தின் பிரதிபலிப்பு.



பகலில் மட்டுமா? இரவுகளில் கூட, துக்கத்தை மட்டுமல்ல தூக்கத்தையும் தொலைத்து, விழிப்புணர்வை ஏற்படுத்தும் சிவராத்திரி மற்றும் வைகுண்ட ஏகாதசி கொண்டாட்டங்கள் பிரசித்தி பெற்றவை.

இவையெல்லாவற்றையும் விட சிறப்பு வாய்ந்தது தீபாவளிப் பண்டிகை என்று சொன்னால் அதை யாராலும் மறுக்க முடியது.

அரக்க குணங்களை அழித்து நல்ல எண்ணங்களை விதைத்து, அனைத்திந்தியாவிலும் கொண்டாடப்படும் ஒப்பற்ற பண்டிகையாகும், திக்கெட்டும் தித்திக்கும் தீபாவளி.

அதிகாலையில் எழுந்து, புனித கங்காஸ்நானம் செய்துவிட்டு, புத்தாடை உடுத்தி, பலகாரப்பிரசாதம் அருந்தி, பட்டாசுகள் வெடித்து, உறவினர்–நண்பர்களுடன் வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டு, கோயிலுக்குச் சென்று குதூகலிக்கும் நன்னாள் இந்தத் திருநாள். ஐப்பசி அமாவாசை அனுசரித்து வரும் இந்த பெருவிழா, எல்லோர் பசியையும் தீர்க்கும் என்ற தீர்க்கம் தான், நம் முன்னோர்களால் அறிந்துணர்ந்து ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

பசிப்பிணி என்றல்ல, எல்லா பிணிகளையும் நீக்கி, அனைவரின் வாழ்க்கையும் மேன்மையடைய பிரார்த்திக்கும் பொன்னாள், நம்நாள், இந்த தீபாவளி.

ஜாதி, மதம், இனம், மொழி, நாடு இவைகளைக் கடந்த தூய மனங்களின் சங்கமம் தான் பண்டிகைகள்.

வாழ்த்து சொல்லும் உள்ளங்களே இந்த கூற்றை மெய்ப்பிக்கும். அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்.

–வீரஜா







*With best compliments from*

## Kfam Group of Companies



K.K.Dinakaran
Chairman & Director

## Pandian Surfactants Private Limited

Manufacturers Representative for

Godrej — Chemical Division

IFF — Perfumes & Fragranaces

INDORAMA — Speciality Chemicals

## Kfam Micro Products Private Limited

Manufacturers of Speciality Chemicals & Consumer Products

Micro Sol — Perfect Cleaning for Future Life



## Kfam Micro Polymers

Manufacturers of Blow Moulding & Injection Moulding Products









Regd. Office : **Pandian Surfactants Private Limited**

**Shed No.57/62, (NP) Sector 1, 3rd Street, Ambattur Industrial Estate,**
**SIDCO Industrial Estate, Pattaravakkam, CHENNAI-600 098.**
**Email : dinakaran@pfpl.in Kishan@pfpl.in www.pandiansurfactants.com**

| Branches | Chennai | Madurai | Hyderabad | Bangalore |
|---|---|---|---|---|

# நிகழ்வுகள் சில...



13.10.2024 அன்று ஸௌராஷ்ட்ர சேம்பர் அரங்கில் நடைபெற்ற ஸௌராஷ்ட்ர சமூக தொழில் வர்த்தகர்களுடனான சந்திப்புக் கூட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் **எல்.முருகன்** அவர்களிடம் மதுரை மற்றும் தொழில் வளர்ச்சிக்கு கோரிக்கை மனு அளித்தது.



04.10.2024 அன்று சேம்பர்-ல் இணைந்து பணியாற்ற விரும்புவோருக்காக சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. அவர்களை சிறப்பு அழைப்பாளர்களாக நமது சேம்பர் இணைத்துக் கொண்டது. மகளிரும் இதில் பங்கேற்க வேண்டும் என்று கருதி அவர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டது.







13.08.2024 ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி அன்று குழந்தைகளை ஆன்மிகப் பற்றை ஏற்படுத்தி மகிழ்விக்க ஸ்ரீபிரசன்ன வெங்கடேஸ்வர பெருமாள் கோவிலில் கிருஷ்ணர் மற்றும் ராதை வேடம் அணிந்து வரும் குழந்தைகளுக்கு சிறப்பு பரிசுகள் விழாவினை ஸௌராஷ்ட்ர சமூக நலப் பேரவை ஏற்பாடு செய்திருந்தது. இதில் 100க்கும் மேற்பட்ட குழந்தைகள் வேடமணிந்து பெற்றோர்களுடன் கலந்து கொண்டனர். 22.09.2024 அன்று மதுரை தெப்பகுளம் பகுதியில், 70 வயது நிறைந்த தம்பதியகர்களுக்காக சமஷ்டி ஹோமம் ஏற்பாடு செய்திருந்தது. இதில் 80 தம்பதியர்கள், தங்கள் குடும்பம் உறுப்பினர்கள், உற்றார் உறவினர்களோடு மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர். விழாவில் வீரவநல்லூர் ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள் கலந்து கொண்டு தம்பதியர்களுக்கு அருளாசி வழங்கினார். திரு. எஸ்.கே.ஆர். ரமேஷ், செயலாளர் பி.எம். முரளி, பொருளாளர் திரு. கிஷோரிலால், ஒருங்கிணைப்பாளர் சரவணன் மற்றும் நிர்வாகிகள் இணைந்து சிறப்பாக நடத்திச் சென்றனர்.







VH VEDHAVALLI HOLIDAYS
Enjoy your Group Tour
7 நாட்கள் எகிப்து
5 நாட்கள் தாய்லாந்து
5 நாட்கள் அந்தமான்
5 நாட்கள் ஸ்ரீலங்கா
7 நாட்கள் துருக்கி
5 நாட்கள் டெல்லி-ஆக்ரா ஜெய்பூர்
TOURIST VISA ASSISTANCE
அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா,
ஜப்பான், தென் கொரியா,சீனா, ஐரோப்பா,
ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர் ஆகிய
நாட்டின் சுற்றுலா விசா பெற்றுத்தரப்படும்
91599 18447
Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking
VH VEDHAVALLI HOLIDAYS
வேதவல்லி ஹாலிடேஸ்
82, காமராஜர் சாலை, அலங்கார் தியேட்டர் எதிர்புறம், மதுரை -09



## இரங்கல்

பெயர்: பி.ஆர்.எஸ். சிவக்குமார்
தொழில்: கட்டிடக் கலை நிபுனர் (ஆர்கிடெக்ட்)
ஸௌ. சேம்பர் : ஆயுட்கால உறுப்பினர்

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் ஆயுட்கால உறுப்பினர் கட்டிடக்கலை நிபுணர் ஆர்கிடெக்ட் திரு. பி.ஆர்.எஸ். சிவக்குமார் அவர்கள் கடந்த 07.10.2024 அன்று காலமானார் என்ற செய்தி மிகுந்த வருத்தமும், வேதனையும் அளித்தது. இவர் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் நலம் விரும்பியும், சிட்கான் மாநாட்டின் நன்கொடையாளரும் ஆவார். ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் செயல்பாடுகளுக்கு என்றும் தனது ஆதரவைத் தந்து ஊக்கமளிப்பவர் இன்று நம்மைவிட்டு பிரிந்து மீளாத்துயரித்தில் ஆழ்த்தியுள்ளார். அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு அழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

## இதழ் வெளியீடு




21.09.2024 அன்று 2022-24 லாப் ஸமாச்சார் குழுவினரின் கடைசி வெளியீடான செப்டம்பர் 2024 இதழை லாப் ஸமாச்சார் இதழின் வெளியீட்டாளர், மூத்த ஆசிரியர் திரு. கே.கே.ஜி. பிரபாகரன் அவர்களின் கரங்களால் அவரது இல்லத்தில் வெளியீடு செய்தது. இந்த நிகழ்வில் சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், இதழ் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.



**மழை நீரை சேமிப்போம்!**
**நிலத்தடி நீரை காப்போம்!!**













Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**



நம்பிக்கைக்கும், வலிமைக்கும்
JSW COLOURON+ கூரைகள்
JSW Steel
JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக
தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்
ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.
18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.
போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63
கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.
Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in




நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்
Meerakunj
RIGID PVC PIPES,FITTINGS & TANKS
AN ISO 9001 : 2008 COMPANY
Trust us with all your Electrical Plumbing and Agri needs...
Architect's First Choice
Architects Suggest ...
The right way to sensible plumbing
Specialy Made for Borewells
Specialy Made for Watersupply
Meerakunj GOLD EXTRA THICK
வாட்டர் டேங்கிற்கு 10வருட வாரண்டி
மீரா குஞ்ச் பாலிடிரேடர்
17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.
போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372
E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com




MAYFLOWER
The Banquet Hall A/c
For Booking
94439 30728
86100 06493
92442 31583
161F, Salai Pillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625009




VIGNESH GRAPHICS
All Kinds of Printing Solution
★ Brouchers
★ Wedding Cards
★ Souvenirs & Directories
★ Visiting Cards
Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.
Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.
Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.
O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com
★ Letter Pads
★ Shopping Bags
★ Paper Bags
★ Menu Cards

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2022-2024
Printed Matter

Date of Posting : 20.10.2024 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2022 - 2024
Date of Publication 20th of Every Month


0452 231 2293 / 98409 60846 / 90479 50885

**UG CHEMI JAGSAN**

**U G கெமி ஜாக்சன்**



(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009

E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com



**வேல் மருத்துவமனை**


**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com



Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

24hrs Service



**சிறப்பம்சங்கள்**

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ


*Experience the Expertise Advice*

**உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்**

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*




**திரைஅரங்குகளில்
இப்படத்தைகானா
அனைவரும் வருக**




**BHARGAVI PHOTOGRAPHY**

READY | SMILE | CLICK

ALL EVENT MANAGEMENT

1/5B D2 D2 Road Balangapuram madurai 625009




Candid Photography | Candid Videography | Pre Wedding Shoot | Modelling Photography | product photography



P.S.Rathinakumar
9345207733